**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 08.10.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் நெல் நடவு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவையில் இளங்கலை வேளாண்மை (மேதமை) மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் நன்செய் பண்ணையில் நெல் நடவு செய்தனர். இளங்கலை (வேளாண்மை) படிக்கும் மாணவர்கள் தாங்கள் படித்த அறிவியல் தொழில்நுட்பங்களைக் கொண்டு தானாக நெற்பயிர் பயிரிடவேண்டும். மாணவர்களுக்கு 4 சென்ட் அளவு நிலம் வழங்கப்படும். அதில் அவர்கள் சேற்றுழவு முதல் அறுவடை முதலான அனைத்து பணிகளையும் செய்ய வேண்டும். நெற்பயிர் நடவு நன்செய் பண்ணையில் 07.10.2025 அன்று நடைபெற்றது. காலை 6.30 மணியளவில் மாணவர்கள் நடவுப் பணியை செய்ய துவங்கினர். தொடக்க விழாவில் கலந்து கொண்ட பல்கலைக்கழக உயர்அதிகாரிகள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களை பாடப்பேராசிரியர் முனைவர் K. திருகுமரன் வரவேற்றார்.

முனைவர் R. கிருஷ்ணன், பேராசிரியர் மற்றும் தலைவர், உழவியல் துறை அவர்கள் மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய மேலாண்மை முறைகள் குறித்து விளக்கம் அளித்தார். முனைவர் N.வெங்கடேசபழனிசாமி, முதன்மையர் (வேளாண்மை) அவர்கள் விழாவின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நெல் நடவு விழாவை தொடங்கி வைத்தார். மேலும் இவ்விழாவில் முனைவர் M. K. கலாராணி, இயக்குநர் (பயிர் மேலாண்மை இயக்குநரகம்), முனைவர் R. உமாராணி, இயக்குநர் (விதை உற்பத்தி), முனைவர். V. பாலசுப்ரமணி (தேர்வு கட்டுப்பாட்டாளர்), ஆகியோர் நடவு விழாவில் கலந்து கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடினார்கள். பின்பு பல்கலைக்கழக உயர்அதிகாரிகள், துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் வயலில் இறங்கி மாணவர்களுடன் சேர்ந்து நெல் நடவை தொடங்கிவைத்தனர்.

பாடபேராசிரியர் முனைவர் V. மணிவண்ணன், முனைவர் G. பிரபுகுமார், முனைவர் S. P. சங்கீதா மற்றும் முனைவர் K. நாகராஜன் ஆகியோர் நெல் நாற்று நடவு விழாவினை ஏற்பாடு செய்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**